## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 204/2018**

திரு. அழகர் (D.W –3) **02.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து வீடு என்றால் சரி. ஒரு கடையும் உள்ளது. தாவா சொத்தை நேரில் பார்த்து உள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தை வாடகைக்கு விட்டால் என்ன வாடகை பெறும் என்றால் சுமார் 10,000 வரும். தாவா விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் கடைக்கு போகும் போது சொல்வார்கள். ஒரு லட்ச ரூபாய் கடன் வாங்கியதாக சொன்னார்கள். அதற்கு மாதம் தொகையை திருப்பி செலுத்துவதாகவும் சொன்னார்கள். தாவா சொத்திற்குரிய ஆவணங்களை பார்த்து உள்ளீர்களா என்றால் இல்லை. அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

2. தாவா சொத்து ரேவதி வகையறா பேரில் கிரயம் ஏற்பட்டுவிட்டது தெரியுமா என்றால் இரண்டு வருடங்கள் முன்பு ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். முதல் விசாரணை வாக்குமூலத்தில் எதன் அடிப்படையில் ஆவணங்கள் மோசடியாக ஏற்பட்டுள்ளதா என்றால் அதில் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்பதை எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள் என்றால் வாய் மொழியாக என்னிடம் சொன்னார்கள் அதனடிப்படையில் சொல்லி உள்ளேன் அ.வ.எண்.107/2013 வழக்கில் தாவா கிரைய சொத்து கிரைய அசல் ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதி உடையது என்று கையெழுத்து நிபுணர் அறிக்கை கொடுத்து சாட்சியம்

அளித்துள்ளார் .ஆகையால் நான் தற்போது முதல் விசாரணையில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதி உடையது இல்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

3. அசல் வழக்கு எண். 107/2013 தீர்ப்புரையை படித்துப் பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். அதில் பிரதிவாதிகள் கையொப்பம் செய்து தாவா சொத்தை வாரிசு கிரயம் செய்து கொடுத்து உள்ளதாக விவாதிக்கப்பட்டுள்ளதால் என்னுடைய சாட்சியமே சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண்.107/2013 தீப்புரைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். மேல்முறையீட்டு எண் தெரியுமா என்றால் தெரியாது. மேல்முறையீடு பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. அதனால் தான் மேல்முறையீட்டு எண் குறிப்பிடவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே வட்டி மற்றும் கடன் ஏற்பட்டதாக சொல்வதை பொருத்து ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. அம்மாதிரி எந்த ஒரு கடன் வட்டி எதுவும் வாரிக்கும் பிரதிவாதிக்கும் இடையே இல்லை வழக்கிற்காக அவர்கள் சொன்னதின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தில் கிரைய ஆவணத்தின் படி வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

கிரைய ஆவணத்திலே யேதாவா சொத்தின் சுவாதீனம் முதல் வாதியிடம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தை கிரையம் சுவாதீனமும் வாதி பெற்றபிறகு பிரதிவாதி இரண்டு வருடங்கள் குடியிருந்து வருவதாக சொன்னதால் அனுமதி அடிப்படையில் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றால் தெரியாது. தாவா சொத்தை சுவாதீனம் வாடகை இழப்பும்கேட்டு வாதிகள் தாக்கல் செய்த வழக்கு

அனுமதிக்கப்படவேண்டும் என்றால் தவறு. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.01.19 18:47:11 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.